**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. செங்கல்வராயன் | அசல் வழக்கு எண். | 45/2018 |
| த/பெ. | - | மஞ்சினி | பி.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

05.11.2025.

**8 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வழக்கு சொத்துக்கள் கொஞ்சுமங்கலம் கிராமத்தில் உள்ளது. எனது பூர்வீக ஊர் கொஞ்சுமங்கலம் என்றால் சரிதான். சமீப காலமாக தான் புதுச்சேரியில் வசித்து வருகிறேன் என்றால் 30 வருடங்களாக வசித்து வருகிறேன். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் 6 செண்ட் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் முத்துகவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டது. முத்துகவுண்டர் அனுபவித்து வந்து யாருக்கெல்லாம் கிரையம் கொடுத்தார் என்றால் எனது தாத்தா நடேசகவுண்டர் என்பவருக்கு 3 1/4 செண்டும், பெருமாள் கவுண்டர் என்பவருக்கு 2 3/4 செண்டும் கிரையம் கொடுத்தார். எந்த தேதியில் கிரையம் கொடுத்தார் என்றால் 1959 ம் ஆண்டில் கிரையம் கொடுத்தார். எனது தாத்தா நடேகவுண்டர் என்பவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் என் அப்பா மஞ்சினி கவுண்டர் மற்றும் என் சித்தப்பா அபிமன்னகவுண்டர் ஆகிய இருவர் வாரிகள். என் தாத்தா கிரையம் வாங்கிய 3 1/4 செண்டு பூமியை எனது அப்பாவும் சித்தப்பாவும் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டனர் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு பாக பிரிவினையில் எவ்வளவு விஸ்தீரணம் ஒதுக்கப்பட்டது என்றால் 1 1/2 செண்டு பூமி ஒதுக்கப்பட்டது. எனது சித்தப்பா அபிமன்னகவுண்டருக்கும் 1 1/2 செண்டு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் மஞ்சினி இறந்துவிட்டார். எனது தகப்பானருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் நான் (செங்கல்வராயன்) கோவிந்தசாமி, நடராஜன், நடேசன், பாலு, ஜெயகோபால் ஆகிய 6 நபர்கள் வாரிசுள். எனது தகப்பனார் இறந்த பின்பு அவருக்கு கிடைத்த சொத்துக்களை வாரிசுகள் அனைவரும் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். எனது சகோதரர் கோவிந்தசாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய மனைவி தான் 2 ம் பிரதிவாதி என்றால் சரிதான். என் சகோதரர் பாலு இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய மனைவி தான் 6 ம் பிரதிவாதி என்றால் சரிதான். பாலு மற்றும் 6 ம் பிரதிவாதியின் குழந்தைகள் தான் 7 ம் பிரதிவாதி என்றால்

சரிதான். எனது தகப்பனாருக்கு கிடைத்த சொத்துக்களை நாங்கள் என்ன செய்தோம் என்றால் 8ம் பிரதிவாதிக்கு என் உடன்பிறப்புகள் அனைவரும் சேர்ந்து கிரையம் கொடுத்துவிட்டோம்.

2. முத்துகவுண்டர் என்வரிடமிருந்து வழக்கு சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்ற பெருமாள் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பெருமாள்கவுண்டர் மனைவி கண்ணம்மாள் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பெருமாள்கவுண்டர் மற்றும் கண்ணம்மாள் ஆகியோருக்கு யாரெல்லாம் வாரிசுகள் என்றால் முத்துகிருஷ்ணன், கோபாலகிருஷ்ணன், அபிமன்னன், காசிநாதன், மணிவாசகம். பெருமாள்கவுண்டர் இறந்த பின்பு அவர் கிரையம் வாங்கிய சொத்தை அவருடைய வாரிசுகள் அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரிதான். பெருமாள்கவுண்டர் கிரையம் வாங்கிய சொத்தானது அவருடைய குமாரர்களுக்கு இடையே ஏற்பட்ட பாக பிரிவினையில் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் கோபாலகிருஷ்ணனுக்கு ஒதுக்கப்பட்டது. கோபாலகிருஷ்ணன் தற்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணன் மனைவி பெயர் என்னவென்றால் எனக்கு ஞாபகமில்லை. கோபாலவிருஷ்ணன் என்பவரின் வாரிசு தான் 8ம் பிரதிவாதி என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு வாய்மொழி பாகபிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்தை 8ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். எங்களிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தையும் கோபாலகிருஷ்ணனின் வாரிசு என்ற அடிப்படையில் அடைந்த சொத்தையும் 8ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். எங்களிடம் கிரையம் பெற்ற சொத்தில் கொட்டகை அமைத்தும் வைக்கோல் வைத்தும் 8ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் வாதிகள் அனுபவத்தில் இருந்ததில்லை என்றும் அவர்களுக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2025.11.05 17:09:09 +0530

District Munsif

Vanur.